செ.வெ.எண் :- 454.

நாள் 18.07.11

## செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மனநலம் குன்றிய மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பொது இடங்களில் ஆதரவற்று சுற்றித் திரியும் கட்டுப்படுத்த இயலாத மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இந்த ஆண்டு புதிய இல்லங்களை தோற்றுவிப்பதற்கான ஆலோசனை வழங்கி உள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து மாண்புமிகு சமூகநலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் துறை அமைச்சர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள் சென்னையில் இயங்கி வருகின்ற சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அழைத்து இன்று (18..7.2011) ஆலோசனை நடத்தினார்கள். இவ்வாலோசனை கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப., உடன் இருந்தார்கள் .

கூட்டத்தில் அன்பகம் மனநல இல்லம், பாத்வே, மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம், ஜி.டி.போவாஸ் மன நலம் பாதிக்கப்பட்டோர்களுக்கான இல்லம் மற்றும் பாலவிஉறார் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் ஆகியவற்றின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மனநலம் குன்றியவர்களுக்கான திட்டங்களை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்றும், இத்திட்டங்களை செயல்படுத்துவதில், மக்கள் நல வாழ்வுத் துறையோடும், காவல் துறையோடும் இணைந்து விரைவாக இத்திட்டங்கலை செயல்படுத்த அனைத்து துறைகளையும் ஒருங்கிணைந்து விரைவில் ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

P.R.Sampath
18.7.11

(ப.ரா.சம்பத், இ.ஆ.ப.,)
, மாநில ஆணையர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை
சென்னை.